KALAIKESARI
# கலைக் கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

OLUME : 10 ISSUE : 01 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 119 / News / 2018



இலங்கைத் தமிழ் பௌத்தத்தின் அடையாளம்

## இராஜராஜப் பெரும்பள்ளி

## சம்பூர் கிராம தேவதைச் சடங்கு

## Prakrit, Tamil and the Nagas in some Coin – legends

Prof. S. Pathmanathan

ISSN 2012-6824

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 100.00 | CANADA........CAN$ | 10.00 | USA...........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 125.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK.............GB£ | 6.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS.............CHF | 10.00 | EUROPE..EU€ | 7.00 |




# இலங்கைத் தமிழ் பௌத்தத்தின் அடையாளம்

# இராஜராஜப் பெரும்பள்ளி

சாந்தினி அருளானந்தம்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கோகர்ண என்ற பண்டைய பெயரில் அறியப் பட்ட திருகோணமலைப் பிரதேசமானது வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் முக்கியத்து வமுடையதாக விளங்கி வந்துள்ளது. இயற்கைத் துறைமுகத்தை கொண்ட இப்பிரதேசம் இலங்கை யின் வரலாற்றில் கவனத்திற்குரியதாக இருந்துள்ள தைப் பல்வேறு சான்றுகளினூடாக அவதானிக்க முடிகின்றது. அப்பிரதேசத்தில் காணப்படும் தொல்லியல் வரலாற்று மையங்களில் பெரியகுளம் என்ற இடமும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந் ததைக் காணலாம். திருகோண மலையிலிருந்து அனுராதபுரத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையில் ஒன்பது கிலோமீற்றர் சென்று, வெல்கம் விகாரை சந்தியினின்றும் கிளைப்பாதை வழியாக ஐந்து கிலோ மீற்றர் கடந்தால் வெல்கம் விகாரையின் அழிபாடுகளை அவதானிக்கலாம். இத்தொல்லியல் வரலாற்று மையமானது 1929 இல் அடையாளம் காணப்பட்டு, 1934 இல் தொல்லியல் மையமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆரம்பத்தில் இருமேடுகள் தொல்லியலாளரின் கவனத்திற் குரியதாக இருந்தன. இவை அகழ்வாய்க்கு உட் படுத்தப்பட்டபோது ஒன்றில் தூபியின் அழிபாடு களும் மற்றையதில் சிலை மனையும் (Image House) வெளிப்பட்டன. தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் கல்வெட்டுக் களும் மற்றும் பல பொருட்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் இங்கு பெரிய குளம் ஒன்றும் அடையாளம் காணத்தக்க வகையில் அமைந்திருப் பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியகுளத்தில் அமைந்திருந்த இவ்விகாரை இலங்கையின் வரலாற்றில் இனங்களுக்கிடை யிலான குறிப்பாக இருசமயங்களுக்கிடையே




சோழவம்சத்தின் வரலாற்றிலும் இப்பள்ளி முக்கிய மானவொன்றெனலாம்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் காலத்துக்குக் காலம் பல்வேறுபட்ட உறவுகள், தொடர்புகள் இருந்து வந்துள்ளதை பாளி இலக்கியங்களும் தொல்லியற் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. தென்னிந்தியாவில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழ அரசு ஒரு பேரரசாக மாற்றமடையத் தொடங்கிய நிலையில் இலங்கையும் அயலிலிருந்த அரசுகளும் அதனுடைய செல்வாக்கிற்கு உட்பட வேண்டியிருந்தன. கி.பி.993 - 1012 வரை ஆட்சி செய்த முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் சோழப்பேரரசு எய்திய வளர்ச்சியை நீலகண்ட சாஸ்திரி பின்வருமாறு குறிப்பிடுகின்றார் "இராஜ ராஜன் ஆட்சியை ஏற்றுக்கொண்டபோது சோழ அரசு சிறிதாக இருந்தது. இராஷ்டிடகூடத் தாக் குதல்களின் விளைவுகளின்றும் நீங்கிய சோழ முடியாட்சி இராஜராஜனின் ஆட்சியின் கீழ் சக்தி மிக்கதாக வளர்ந்தது. வியாபித்துப் பரந்தும் செல்வ வளம் மிக்கதாகவும் சிறந்த நிர்வாக அமைப்புள்ள தாயும் சோழஅரசு பரிணமித்தது. சக்திமிக்க கடற் படை, தரைப்படை ஆகியன களந்தேறின வாயும் மிகப் பெரிய முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியன வாயும் இருந்தன". இக்கூற்றிலிருந்து இராஜராஜ சோழன் காலத்திலிருந்து சோழ அரசு மிகப்பெரிய வளர்ச்சி அடைந்ததை அறியலாம்.

முதலாம் இராஜராஜசோழன் கட்டியெழுப்பிய பலத்தின் அடிப்படையில் அயலரசுகளும் அயல் நாடுகளிற் பலவும் சோழப் பேரரசுக்குள் மிக விரை வாக உள்வாங்கப்பட்டன. முதலாம் இராஜ ராஜ சோழன் வணிகவளங்களை முதன்மைப்படுத்தி சமகாலத்தில் மேலைத்தேய, கீழைத்தேய

காணப்பட்ட சமரச உறவின் அடையாளமாக நோக்கப்படுகின்றது. ஏனெனில் இங்கு மேற் கொள்ளப்பட்ட மேலாய்வு மற்றும் அகழ்வாய்வு களின் அடிப்படையில் இவ்வரலாற்று மையமானது தனித்துப் பௌத்தமதத்துடன் மட்டும் தொடர்பு பட்டதாக அமையாது தமிழர்களோடும் தொடர்பு பட்டதாக இருந்துள்ளமை இலங்கையின் வரலாற்றில் இன்னொரு பக்கத்தை எடுத்துக்காட் டுவதாக அமைந்திருந்ததெனலாம். மேலும் சோழ ஆட்சியாளரோடும் இவ்விகாரை நெருக்கமான வகையில் இருந்துள்ளமையை இங்கு கிடைத்த தமிழ் கல்வெட்டுக்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்விகாரை ஆரம்பத்தில் வெல்கம் விகாரை என அழைக்கப்பட்டு வந்துள்ளது. சோழரின் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டதை அடுத்து அவர்களது போசிப்பைப் பெற்று வந்துள்ள துடன் சோழப் பேரரசின் சிறந்த மன்னனாகப் போற்றப்படுகின்ற இராஜராஜனுடைய பெயரினா லும் சுட்டப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். எனவே இலங்கையின் வரலாற்றிலும் தென்னிந்திய



சூடாமணிவிகாரை

வர்த்தகத்தில் இந்துசமுத்திரம், மத்தியரைக்கடல், மலாக்கா சுந்தா நீரிணை முதலான வர்த்தகத் தளங்களில் இடைத்தரகர்களாக வணிக மேலாண்மை பெற்றிருந்த இஸ்லாமியரின் செல்வாக்கினை முறியடிப்பதனையும் தென் கிழக்காசியா, சீனா முதலிய நாடுகளுடனான வர்த்தகத்தைத் தடையின்றி நடத்தி, வங்காள விரிகுடாவைச் சோழவாவியாக்குவதனையும் அடிப்படையாகக் கொண்டு படையெடுப்புக்களைத் திட்டமிட்டு மேற்கொண்டான். இவனது மகனாகிய முதலாம் இராஜேந்திர சோழனும் இவ்வாறான நோக்கத்தையே கொண்டிருந்தான் என்பதைப் பேராசிரியர் சத்தியசீலன் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார். "வங்காள விரிகுடாவின் கரையோரங்கள் இந்து சமுத்திர வர்த்தகப் பாதையினூடாக காணப்பட்ட தீவுகளை அடிமைப்படுத்தியமை, அக்குடாவை சோழ சமுத்திரமாக மாற்றுவதில் வெற்றிகண்டமை, தாக்கப்பட்ட இடங்களாகிய மாநக்கவாரம் மாப்பளம், தலைத்தக்கோலம் என்பன வர்த்தக முக்கியத் துவம் வாய்ந்த துறைகளாக இருந்தமை இவற்றையெல்லாம் பார்க்கும்போது இப்படையெடுப்புக் களுக்கு அரசியல் முக்கியத்துவத்தைவிட வர்த்தக முக்கியத் துவமே கொடுக்க வேண்டியுள்ளது." எனவே சோழரின் படையெடுப்புக்கள் வர்த்தகநலன் சார்ந்தவை என்பது புலனாகும்.

9ஆம் நூற்றாண்டின் மத்தியபகுதியில் பாண்டிய முடியைப் பெறுவது மற்றும் வணிகம் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களின் பின்னணியில் 1ஆம் பராந்தகசோழன், சுந்தரசோழன், 1ஆம் இராஜராஜ சோழன், 1ஆம் இராஜேந்திரசோழன் போன்ற சோழ ஆட்சியாளர்கள் இலங்கையிலும் தமது கவனத்தைச் செலுத்தியிருந்தனர். முதலாம் இராஜராஜசோழன் கி.பி. 993 இல் வடஇலங்கை மீது படையெடுத்து அதனைச் சோழநாட்டின் மண்டல நிர்வாக அலகின் கீழ் கொண்டுவந்தான். கி.பி. 1017 இல் முதலாம் இராஜேந்திரசோழன் முழு இலங்கையையும் தன் ஆணையின் கீழ் கொண்டுவந்ததை தென்னிந்தியா மற்றும் இலங்கையில் கிடைக்கும் கல்வெட்டுச் சான்றுகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். இப்பின்னணியில் ஏறக்குறைய 77 ஆண்டுகள் இலங்கை சோழராட்சியின் கீழ் இருந்ததோடு சோழ மயமாக்கத்திற்கும் உட்பட்டிருந்ததைப் பல்வேறு வரலாற்றுச் சான்றுகளும் எடுத்தியம்புகின்றன. இதனால் இலங்கையின் வரலாற்றிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டன. Kingsley De Silva "சோழ ஆட்சியின் தவிர்க்க முடியாத தாக்கம் என்னவெனில் இலங்கை மதத்துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் இந்து



மரபுகளும், வழமைகளும் திராவிடக் கட்டிடக் கலையும், தமிழ்மொழியும் ஊடுருவி மிகப்பலமான வளர்ச்சி பெற்றதேயாகும்" எனக் குறிப்பிடுவது இந்த மாற்றங்களை விளங்கிக் கொள்ளத் துணையாகின்றது. குறிப்பாக இலங்கை யின் பாரம்பரியமான மதத்திலும் பண்பாட்டு மரபுகளிலும் ஏற்படுத்திய மாற்றம் குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சிக்காலத்தில் பௌத்த சமயம் நலிவுற்றிருந்தது. பக்தி இயக்கத்தின் விரிவான ஆழமான செயற்பாடுகள் சமண சமயத்தைப் போலவே பௌத்த சமயத்தின் செல்வாக்கிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. சோழர் தென்னிந்தி யாவில் பேரரசை அமைத்த காலத்தில் மீண்டும் பௌத்த சமயமானது சங்கமருவிய காலத்தைப் போல சிறப்புறவில்லையெனினும் அரச ஆதரவைப் பெற்றிருந்ததைச் சான்றுகள் வாயிலாக அறிய முடிகின்றது. தென் கிழக்காசியாவின் ஆட்சியாளனுக்காக 1ஆம் இராஜராஜ சோழன் நாக பட்டினத்தில் ஒரு பௌத்தப் பள்ளியை அமைப்பதற்கு ஆதரவு வழங்கியதோடு அதன் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளின் பொருட்டு ஆனை மங்கலம் என்ற கிராமத்தையும் இறையிலித்தானமாக வழங்கியிருந்தான். ஆனைமங்கலச் செப்பேடுகள் இச் செய்தியை எடுத்துக்காட்டுகின்றன. ஒரு தென்கிழக்காசிய மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கி, நாகபட்டினத்தில் விகாரையை இராஜராஜ சோழன் நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கிய

தற்கான பின்னணி யாது என்பதை நோக்கின் மேலே குறிப்பிட்டது போல சோழ அரசு வணிக பொருளாதார மேலாண்மையைக் கருத்திற் கொண்டமையே எனலாம். இக்கால கட்டத்தில் வர்த்தக மேலாண்மை பெற்றிருந்த சோழப்பேரரசு - ஸ்ரீ விஜயப் பேரரசு ஆகிய இரு அரசுகளிடையேயும் நட்புறவு நிலவியமை அமைதியான விரிவான வர்த்தக நடவடிக்கைகளுக்குச் சாதகமாக இருந்ததெனக் கூறலாம்.

தென்கிழக்காசியாவில் இக்காலத்தில் ஸ்ரீ விஜயப் பேரரசு எனப்பட்ட சைலேந்திர பேரரசு அயலிலிருந்த அரசுகளைத் தனது மேலாண்மைக்குள் கொண்டு வந்திருந்தது. அக்காலத்தில் மும்முரமாக நடைபெற்ற சீனாவுடனான பிறநாடுகளின் வர்த்தகத்தில் இடைநாடாக ஸ்ரீ விஜய பேரரசின் பிரதேசங்கள் காணப்பட்டன. பாண்டிய, கேரள, இலங்கை அரசுகள் மற்றும் சாளுக்கிய அரசு வெற்றி கொள்ளப்பட்டு இராஜராஜசோழனின் ஆட்சியின் முடிவில் தீவுப்பகுதிகள் சிலவும் இணைக்கப்பட்டமையை நீலகண்ட சாஸ்திரி எடுத்துக் காட்டுகின்றார்.

இந்நிலையில் சோழர் மாலை தீவைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஸ்ரீ விஜய அரசுடன் நட்புறவைப் பேணவேண்டிய தேவை ஏற்பட்டதெனக் கருதமுடிகின்றது. இதன் வெளிப் பாடாகவே நாக பட்டினத்தில் விகாரை ஒன்றினை அமைப்பதற்கு ஸ்ரீ விஜய மன்னனுக்கு இராஜராஜ சோழன் அனுமதியளித்தான். நாகபட்டினத்தில் அமைக்கப்பட்ட விகாரை சமகாலத்தில் ஸ்ரீ விஜயத்தை ஆட்சி செய்த ஸ்ரீ விசையோத்துங்க வர்மனின் தந்தையின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டமையினால் அவனுடைய பெயரால் சூடாமணி விஹாரம் எனப் பெயர் சூட்டப்பட்டது. ஆயினும் சோழப்பேரரசன் இராஜராஜன் பெயரால் இராஜராஜப் பெரும் பள்ளியென அழைக்கப் பட்டதை ஆனைமங்கலம் செப்பேட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம். இராஜ ராஜனைத் தொடர்ந்து இராஜேந்திர சோழனும் தன்பெயரில் பள்ளியொன்றை நிறுவியிருந்தான். பொதுவாக சோழர் காலத்தில் சோழ ஆட்சியாளரின் பெயரால் அவர்களது நிர்வாக அலகுகள், கட்டிடங்கள் அழைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. தமது ஆதிக்கம் நிலை நாட்டப்பட்ட இடங்களிலும் சோழர்கள் அவ்வாறான பெயர்களையே வழங்கியிருந்தனர்.

நாகபட்டினத்து சூடாமணி விகாரையானது சைவ மரபின் அம்சங்களையும் பின்பற்றி அமைக்கப்பட்டமை சோழநாட்டுக் கலைஞர்களால் புனரமைக்கப்பட்டிருக்கலாம் என கருத்தாக்கத்தைத் தருகின்றது. நாகபட்டினத்திற்கு வர்த்தகத்தின் பொருட்டு வருகைதரும் தமிழ் பௌத்த வணிகர் வழிபட உதவுதல் என்பதும் இவ்விகாரை அமைக்கப்பட்டமைக்கு பின்னணியாக இருந்ததெனக் கூறப்படுகின்றது. இக்காலத்தில் நாக பட்டினத்திற்கு சீனா, யாவா, ஸ்ரீ விஜயம் போன்ற பல நாடுகளிலிருந்து வணிகர்கள் வந்து சென்றனர். இந்நாடுகள் அக்கால கட்டத்தில் பௌத்த சமயத்தைப் பின் பற்றிய நாடுகள் என்பது கவனத்திற்குரியது. இவ்விடத்தில் இஸ்லாமிய வர்த்தகப் போட்டியைச் சமாளிப்பதற்காகவும் அத்தகைய ஆதரவை பௌத்தருக்கு சோழ மன்னன் வழங்கியிருக்கக்கூடும். ஆயினும் இஸ்லாமிய வர்த்தகரை அவன் புறக்கணித்தமைக் கான சான்றுகள் காணப்படவில்லை. இக்காலத்தில் தமிழ்நாட்டில் இஸ்லாமிய வணிகர்கள் அஞ்சுவண்ணத்தார் என்ற வணிகக் கட்டமைப்பினை நிறுவி, செயற்பட்டமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன.



சோழர் தென்னிந்தி யாவில் பேரரசை அமைத்த காலத்தில் மீண்டும் பௌத்த சமயமானது சங்கமருவிய காலத்தைப் போல சிறப்புறவில்லையெனினும் அரச ஆதரவைப் பெற்றிருந்ததைச் சான்றுகள் வாயிலாக அறிய முடிகின்றது.





சோழ - கடார நட்பின் பின்னணியில் சூடாமணி விகாரை அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அது பல்லவர் காலத்திலேயே சீனருடனான வணிகத்தின் பொருட்டுக் கட்டப்பட்டதென்பதை வரலாற்றுச் சான்றுகள் அறியத்தருகின்றன. கி.பி. 720 இல் ஆட்சி செய்த பல்லவ மன்னனான நரசிம்ம போத்தவர்மன் நாகபட்டினத்தில் ஒரு பௌத்த கோயிலைக் கட்டினான். வர்த்தகத்தின் பொருட்டு நாகபட்டினத்துக்கு வருகை தரும் பௌத்தர் களுக்காக சீன ஆட்சியாளனின் விருப்பப்படி கட்டப்பட்டதாகவும் அது சீனக்கோயில் என அழைக்கப்பட்டதாகவும் அறியமுடிகின்றது. மார்க்கபோலோவின் குறிப்புக்களில் நாகபட்டினத்தில் சீனக்கோயில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கோயிலே மீண்டும் சோழராட்சியில் புனரமைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்த விகாரை இராஜராஜன் காலத்தில் புனரமைக்கப்பட்டதுடன், இராசேந்திர சோழன், குலோத்துங்கசோழன் போன்றவர்களின் காலத்திலும் போஷிப்பைப் பெற்றிருந்தது. குறிப்பாக அந்த விகாரைக்குரிய ஆனைமங்கல தானத்தை முதலாம் இராஜேந்திர சோழனே சாசனமாக எழுதுவித்தான். மேற்குறித்த சோழ ஆட்சியாளர்கள் இத்தானத்தை தம் ஆட்சிக்காலத்தில் புதுப்பித்துக் கொடுத்தமையையும் அறியமுடிகின்றது. இவ்விகாரை 1867 வரை நிலைபெற்றுப் பின்னர் பிரெஞ்சுக்காரரால் கல்லூரி நிறுவுதற்காக அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பௌத்தத்தை ஆதரித்த சோழர்கள் இலங்கையிலும் பௌத்தத்தை ஆதரித்திருந்தனர். ஆயினும் இலங்கையின் அதிகார பூர்வமான இலக்கியச் சான்றான சூளவம்சம் பௌத்த மையங்களை சோழர்கள் அழித்ததாகவே குறிப்பிடுகின்றது. சோழர்கள், இலங்கையில் பௌத்த சமயத்தை ஆதரிப்பதன் மூலம் நாகபட்டின விகாரையை ஆதரித்து, அனுபவித்து வரும் நன்மைகளைக் கருத்திற் கொண்டு இலங்கையிலும் அத்தகைய இராஜதந்திரத்தைக் கையாள்வர் என்பது தவிர்க்க முடியாததே. இப்பின்னணியில் புனரமைக்கப்பட்ட விகாரமே திருகோணமலையில் உள்ள பெரிய குளத்தில் அமைக்கப்பட்ட இராஜராஜப் பெரும்பள்ளியாகும். நாகபட்டின விகாரையும் இவ்வாறான பெயராலேயே அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சோழரின் ஆதரவைப் பௌத்தசமயம் பெற்றிருந்தது எனக் கூறுவதற்குப் பிறிதொரு சான்றும் எடுத்துக் காட்டத்தக்கது. இலங்கையில் 1070 இல் சோழர் ஆட்சி நிறைவுக்கு வந்த பின்னர் அவர்களது படையினரில் ஒரு பகுதியினர் இலங்கையில் தொடந்தும் தங்கியிருந்தனர். அக்காலத்தில் பொலநறுவையில் புனித தந்த தாதுவின் கட்டடத்தையும், அதன் அறங்களையும் பாதுகாக்குமாறு வேளைக்காரப் படையினரிடம் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தமையை பொலநறுவையிலுள்ள வேளைக்காரக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இக்கட்டடம் ஸ்ரீ தலதாயப் பெரும்பள்ளி (Sri Daladayap perumpalli) என அக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. சோழராட்சிக் காலத்தில் மட்டுமன்றி அது நிறைவுற்ற பின்னரும் பௌத்தம் சோழப் படையினரது ஆதரவைப் பெற்றிருந்தது என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.


இலங்கையை சோழர் கைப்பற்றி ஏறக்குறைய 1300 வருடப் பாரம்பரியம் கொண்ட அநுராதபுரத்தைக் கைவிட்டு, திருகோணமலைக்கு மிக அண்மையிலுள்ள பொலநறுவையைத் தலைநகராக்கியிருந்தனர். கி.பி.10ஆம் நூற்றாண்டளவில் அந்நகர் தலைநகராக்கப்படுவதற்கு அருகே காணப்பட்ட திருகோணமலையின் இயற்கைத் துறைமுகமும் பிரதான காரணமாக இருந்துள்ளமையை குணசிங்கம் போன்ற வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். குறிப்பாக தமிழ்நாட்டுடனான

தொடர்புகளை இலகுவாக்கும் பொருட்டு, அதாவது இலங்கையில் ஆதிக்கத்தை நிறுவுவதற்கும் நிலைப்படுத்துவதற்கும் தேவையான படையினர், நிர்வாகிகள் மற்றும் பண்பாட்டு ரீதியான மேலாதிக்கத்தை ஏற்படுத்தும் தன்மைத்தான வணிகர்கள், கலைஞர்கள் போன்றவர்களை உடன டியாகவும், பாதுகாப்பாகவும் பெற்றுக் கொள்ளும் பொருட்டும் திருகோணமலை அவசியமாகவிருந்தது. இலங்கையில் சோழராட்சியில் திருகோணமலை முக்கியமான பிராந்தியமாக இருந்ததை தொல்லியல் உள்ளிட்ட பல்வேறு சான்றுகளும் எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் காணப்பட்ட விகாரை, சோழர்களால் புனரமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டமை இலங்கை வரலாற்றில் முக்கியமான நிகழ்வெனலாம்.

திருகோணமலையில் சோழர்களால் புனரமைக்கப்பட்ட வெல்கம் விகாரை தேவநம்பிய தீசன் காலத்தில் அமைக்கப்பட்டதாக இணையப் பதிவுகள் குறிப்பிட்டாலும், பாளி இலக்கியங்களில் இவ்விகாரை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இங்கு இனங்காணப்பட்ட இரண்டாம் பாதிகதிஸ என்பவனுக்குரிய (கி.பி.141-165) பிராமிக்கல்வெட்டு, வெல்கமவில் இருந்த அபகார விகாரைக்கு குறிப்பிட்ட நிலங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் சேனாதிபதி அபயனால் கொடையாக வழங்கப்பட்டதை குறிப்பிடுகின்றது. இவனுக்குப் பின்னர் சில ஆட்சியாளர்கள் அவ்விகாரையில் புனருத்தாரணப் பணிகளை மேற்கொண்டதை கல்வெட்டுச்சான்றுகள் தெரியப்படுத்துகின்றன. நிசங்கமல்லனின் ஆட்சிக்காலம் வரை இப்பள்ளி கவனத்துக்குரியதாக விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. வெலகம அல்லது வெல்கமம் என்று அழைக்கப்பட்ட இவ்விகாரையே பின்னர் வெல்கம் விகாரை எனக் குறிப்பிடப்பட்டதாக பேராசிரியர் இந்திரபாலா குறிப்பிடுகின்றார். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக் குறிப்பிலிருந்து 'வெல்கம் விகாரையாகிய இராஜராஜப் பெரும் பள்ளி' என அழைக்கப்பட்டதை அறிய முடிகின்றது. பொதுவாகப் பள்ளி என்பது சமணர்களுக்குரியதாககுறிப்பிடப்பட்டாலும்இக்காலகட்டத்தில் அப் பதம் பௌத்தத்தோடும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதை அவதானிக்ககலாம். பள்ளி என்ற பதமானது இடம், துயில், படுக்கை, ஒரு குறிப்பிட்ட குழுவினரின் பெண்பாற் சொல், என்பவற்றைக் குறித்தாலும் சமய அடிப்படையில் சமணர், பௌத்தர், இஸ்லாமியர் (பள்ளிவாசல்), இந்துக்கள் (பள்ளியறை) இப்பதத்தைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இக்காலகட்டத்தில் சோழர்கள் அமைத்த பௌத்தக் கோயில்களுக்கு பள்ளி என்ற பதத்தோடு பெரும் என்ற அடை மொழியை யும் இணைத்துப் பெரும்பள்ளி எனக் குறிப்பிட்ட னர். தமிழகத்தில் சோழர்களால் அமைக்கப்பட்ட இராஜ ராஜப் பெரும்பள்ளி, இராஜேந்திரப் பெரும் பள்ளி இதற்கு உதாரணங்களாகும். ஆயினும் இவற்றின் தோற்றத்தையோ, பணிகளின் அளவையோ இப்பெயர் சுட்டிநிற்காது பெரும் அரசர்களால் புனரமைக்கப்பட்டதன் பின்னணியிலேயே அவ்வாறு அழைக்கப்பட்டன எனக் கருத முடிகின்றது. ஆயினும் திருகோணமலையில் அடையாளம் காணப்பட்ட பௌத்தபள்ளியானது அளவில் பெரிதாக அமைந்திருந்தது என்பதை அங்கு இன்று காணக் கிடைக்கும் தொல்லியல் எச்சங்களிலிருந்து மதிப்பிட முடிகின்றது.

இராஜராஜப் பெரும்பள்ளி இலங்கை வரலாற்றில் முக்கியத்துவமுடையதென்பதை அங்கு கிடைத்த கல்வெட்டுகளின் எண்ணிக்கையும் அவை கூறும் செய்திகளும் எடுத்துக்காட்டுகின்றன. ஏறக்குறைய 16 தமிழ்க்கல்வெட்டுகள் இங்கு கிடைக்கப்

தமிழகத்தில் பௌத்தத்தை ஆதரித்த சோழர்கள் இலங்கையிலும் பௌத்தத்தை ஆதரித்திருந்தனர். ஆயினும் இலங்கையின் அதிகாரபூர்வமான இலக்கியச் சான்றான சூளவம்சம் பௌத்த மையங்களை சோழர்கள் அழித்ததாகவே குறிப்பிடுகின்றது.







பெற்றுள்ளன. ஆயினும், அவை முழுமையான தாகவோ, விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிடக் கூடியனவாகவோ கிடைக்கவில்லை. சில துண்டு களாகவும், பல அளவிற் சிறியவையாகவும் உள்ளன. பல எழுத்துக்கள் சிதைந்த நிலையி லுள்ளன. இதற்கு இப்பிராந்தியத்தின் மக்கள் தென், தென்மேற்குப் புலப்பெயர்ச்சியோடு இடம் பெயர்ந் தமை பிரதான காரணமெனக் கூறலாம். பிற்காலத் தில் மீளவும் அப்பகுதிகளுக்குச் சென்றவர்கள் இவற்றின்பெறுமதியை அறியாது செயற்பட்டிருக்கக் கூடும். அத்துடன் இலங்கைத் தொல்பொருள் துறை சார்ந்த நடவடிக்கைகளும் தமிழ் மற்றும் இந்து சமயம் சார்ந்த தொல்லியல் புறக்கணிப்பு நிலையைக் கொண்டிருப்பதும் சுட்டிக் காட்டத் தக்கது. பௌத்தம் சார்ந்ததாக இருப்பினும் தமிழர் தொடர்பாக இருப்பது இப்புறக்கணிப்புக்கு காரணமெனக் கருதலாம்.

இராஜராஜப் பெரும்பள்ளியில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளை பேராசிரியர் இந்திரபாலா அவை பொறிக்கப்பட்ட பொருள்களின் அடிப்படையிலும், அதனைப் பொறிப்பித்தவர்களின் அடிப்படையிலும் பின்வருமாறு வகைப்படுத்துகின்றார். ஏழு பொறிப்புக்கள் கற்பலகையிலும் மூன்று பொறிப்புக் கள் சுவரிலும், இரண்டு பொறிப்புக்கள் காவற் கற்களிலும், ஒன்று பீடத்திலும், இன்னொன்று வெண்கல விளக்கிலும் இடம்பெற்றுள்ளன. அதே வேளை இங்கு ஏழு பொறிப்புக்கள் முதலாம் இராஜேந்திர சோழனுக்குரியதாகவும், ஒன்று 2ஆம் இராஜேந்திரசோழனுக்குரியதாகவும் மற்றும் சில சோழரின் ஆட்சிக்காலத்திற்கு உரியதாகவும் எடுத்துக்காட்டப்படுகின்றது. சில 12ஆம் நூற் றாண்டுக்கு உரியவையாகவும் கருதப்படு கின்றன. இராஜராஜப் பெரும்பள்ளியில் கிடைத்த கல்வெட் டுகள், குறித்த பள்ளியில் விளக்கேற்று வதற்காக வழங்கப்பட்ட தானங்ளை மையப்படுத்திப் பொறிக்கப்பட்டுள்ளன. சோழ நிர்வாகிகள் என அடையாளம் காணப்பட்ட சிலரால் வழங்கப்பட்ட தானங்கள் இராஜராஜப் பெரும் பள்ளி அரச கவனத் திற்கு உரிய ஒரு பௌத்தப் பள்ளியாக விளங்கியதை புலப்படுகின்றன.

இலங்கைத் தமிழ்ச்சாசனங்களை அடிப்படை யாகக் கொண்டு தமிழ்மொழியின் வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை இப் பள்ளி யில் கிடைத்த சாசனங்களையும் தம் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். இதன் பிரகாரம் இங்கு கிடைத்த சோழக்கல்வெட்டுக்கள் 11ஆம், 12ஆம் நூற்றாண்டுக்குரியவை என வரையறை செய்கின் றார். தமிழ்மொழியைப் பயன்படுத்திய அதே வேளையில் சில கல்வெட்டுக்கள் கிரந்த எழுத்துக் களைக் கொண்டிருப்பதையும், சில சமஸ்கிருதச் சொற்கள் தமிழ்மொழி மயமாக்கத்திற்குப் பின் எழுதப்பட்டுள்ளதையும் விபரித்துள்ளார். உதார ணமாக ஜெய என்ற சமஸ்கிருதச் சொல், அம் என்ற தமிழுக்குரிய எழுத்தைப் பெற்று ஜெயம் என எழுதப்பட்டுள்ளது என்றும் ஜ என்பது கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது எனவும் குறிப் பிடுகின்றார். மேலும் தமிழ்ச் சொற்கள், மற்றும் மெய்க்கீர்த்தியின் அமைப்புத் தொடர்பாகவும் சில கருத்துக்களும் முன்வைக்கப் பட்டுள்ளன. எனவே இலங்கைத் தமிழ் எழுத்தின் வளர்ச்சிப் போக்கில் இராஜராஜப் பெரும்பள்ளியில் கிடைத்த கல்வெட் டுகளுக்கும் முக்கிய இடமுண்டு எனலாம்.

இராஜராஜப் பெரும்பள்ளியில் கிடைத்த கல்வெட்டு "வெல்கம் வேர ஆன இராஜராஜ..." எனக் கூறுகின்றது. பிறிதொரு கல்வெட்டு 'ஸ்வஸ்தி ஸ்ரீ வீரபரகேசரி வளநாட்டு வெல்கம்...' என்ற வாச கத்தைக் கொண்டுள்ளது. இங்கு கிடைக்கும் இவ்வாறான தமிழ்க் கல்வெட்டுகளிலிருந்தும், இலங்கையில் கிடைத்த ஏனைய சோழக் கல்வெட் டுகளைத் துணையாகக் கொண்டும் சோழர்களின் நிர்வாக முறையின் சில அம்சங்களைப் பற்றிக் கூறமுடிகின்றது. சோழர்களின் படையெடுப்புக் களினால் கைப்பற்றப்பட்ட நாடுகளிற் பலவும்

சோழராட்சியத்தோடு இணைக்கப்பட்டு, அதன் ஒரு நிர்வாக அலகாகவும் மாற்றப்பட்டன. இலங்கையும் 'ஈழமான மும்முடிச் சோழ மண்டலம்' எனக் குறிப்பிடப்பட்டு, 9ஆவது மண்டலமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. சோழரின் மண்டல நிர்வாகப் பிரிவுகளைப் போலவே ஈழமண்டலமும் வளநாடு, கூற்றம், கோட்டம், சதுர்வேதி மங்கலம் எனப் பல நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மாதோட்டம் இராஜராஜ வளநாடு என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சோழ ஆட்சியதிகாரம் கைமாறும் போது பதவியைப் பெறுபவரின் பெயர்களின் பின்னணியில் நிர்வாகப்பிரிவுகள் மாற்றம் செய்யப் பட்டதையும் காணலாம். திருகோணமலை யில் அபயாஸ்ரய வளநாட்டுப் பிரிவில் இராஜராஜப் பள்ளி அமைந்திருந்ததை அங்கு கிடைத்த கல்வெட்டின் மூலம் அறிலாம். இவ்வளநாடானது இராஜேந்திர சிங்க வளநாடு, வீரபரகேசரி வளநாடு, எனப் பிற பெயர்களினாலும் அழைக்கப்பட்டது. பிறிதொரு கல்வெட்டு 'மானாவதி (வள) நாட்டு வெல்க இராஜராஜ பெரும் பள்ளிக்கு' எனக் குறிப்பிடுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

இராஜராஜப் பெரும்பள்ளியில் விளக்கெரிப்பதன் பொருட்டு மந்தைகள், காசு என்பன தானமாக வழங்கப்பட்டுள்ளன. ஆதித்தப் பேரரையன் ஒரு நந்தாவிளக்கும், 84 பசுக்களும் தானமாக கொடுத் தான். பூவண தேவன் நந்தா விளக்கொன்றும் நான்கு



காசும் வழங்கினான். மேலும் அமுதன் சாத்தன் நந்தாவிளக்கும், பத்துப் பசுக்கள், பத்து எருமைகள் என்பவற்றைத் தானமாக வழங்கினான். மேற்படி தானங்கள் பள்ளியில் விளக்கு எரிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தன. தமிழ்ச் சாசனங்களை அடிப்படையாகக் கொண்டு தானம் வழங்கியவர் சிலரின் பெயர்கள் அடையாளம் காணத்தக்கனவாக உள்ளன. ஆதித்தப் பேரரையன், தறியாணன் பூவணதேவன், அமுதன் சாத்தன், கண்டன் யக்கன், பாத்திரவித ராமன் போன்றவர்கள் தானம் வழங்கியவர்களாக அறியப்படுகின்றது. பேரரையன் என்பது சோழ நிர்வாகத்தில் உயர் பதவியில் இருந்த வரைக் குறிப்பதாகவும், இப்பட்டத்தை உடையவன் திருகோணமலையின் சோழ நிர்வாகத்தில் உயர் பதவி வகித்தவன் எனவும் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். மேற்குறிப்பிட்டவர்களிற் பலர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அவர்களது பெயர்களோடு இணைந்து வரும் இடப்பெயர்களின் அடிப்படையில் கூறப்படுகின்றது. ஆயினும் ஆதித்தப் பேரரையன் என்பவன் புதுக்குடியான் எனக் குறிப்பிடப் படுவதால் இலங்கையில் புதிதா கக் குடியிருப்பினை ஏற்படுத்தியவர்களில் ஒருவ னாகவும் இனங் காணப்படத்தக்கவனாவான்.

சோழ ஆட்சியாளர்களால் புனரமைக்கப்பட்ட இராஜராஜப் பள்ளி தமிழ்மக்களில் பலர் பௌத்தர் களாக விளங்கியமைக்குச் சான்றாகவுள்ள ஒரு வரலாற்று மையமாகும். தமிழர்களே தானமளித் துள்ளனர் என்பதை மேற்படி கல்வெட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன. அதேவேளை இப்பள்ளி யில் காணப்பட்ட சோழக் கல்வெட்டுகள் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளமையால் இதன் நிர்வாகமும் தமிழர்களிடமே இருந்திருக்க வேண்டும். மேலும் மற்றையோருக்குத் தானம் வழங்கிய செய்தியைத் தெரிவிப்பதற்குத் தமிழ் மொழியைப் பயன்படுத்தியுள்ளமையால் அங்கு வழிபாடாற்றியவர்களும் தமிழ் பௌத்தர்களே என்பதில் சந்தேகமில்லை. இப்பள்ளி உள்நாட்டு தமிழ்ப் பௌத்தர்களின் வழிபாட்டுக்குரியதாக மட்டுமன்றி, வெளிநாட்டு பௌத்தர்களுக்கும் வழிபாட்டுக்குரியதாக விளங்கியதென குணசிங்கம் குறிப்பிடுகின்றார். எனவே இக்காலத்தில் இராஜ ராஜப் பெரும்பள்ளி புகழ்பெற்ற தமிழ் பௌத்த மையமாக விளங்கியது எனக் கருதலாம்.

சங்கத்தார்களே தானங்களைப் பெற்று, விளக் கெரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட மையை கல்வெட்டுக்கள் தெரியப்படுத்துகின்றன. குறிப் பிட்ட காலகட்டத்தில் தானம் பற்றிக் குறிப்பிடும்

ஆறு கல்வெட்டுகளை அடிப்படை யாகக் கொண்டு ஏறக்குறைய 129 பசுக்களும் 15 எருமைகளும் வழங்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். இதன் எண்ணிக்கை அதிகமாக இருந்திருக்க வேண்டும். ஆயினும் அவற்றின் விபரங்களை இங்கு கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளிலிருந்து அறிந்துகொள்ள முடிய வில்லை. இருப்பினும் இவற்றைப் பராமரித்து நெய், தயிர் பெற்று விளக்கெரிக்கச் செய்வதற்கு நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை மறுக்கமுடியாது. எனவே கி.பி. 11, 13ஆம் நூற்றாண்டுகளில் நிர்வாகக் கட்டமைப் பினைக் கொண்ட தமிழ் பௌத்த மையமாக இராஜராஜப் பெரும்பள்ளி செழிப்புற்றிருந்ததென லாம். அதேவேளை இக்காலகட்டத்தில் தமிழர்கள் அப்பிராந்தியத்தில் செறிந்து வாழ்ந்தனர் எனவும் கூறலாம்.

**இராஜராஜப்பள்ளி தமிழர் சார்புடையதென்பதை அதன் கட்டட அமைப்புமுறையினை அடிப்படையாகக் கொண்டும் அறிஞர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.**

இராஜராஜப்பள்ளி தமிழர் சார்புடையதென்பதை அதன் கட்டட அமைப்புமுறையினை அடிப்படை யாகக் கொண்டும் அறிஞர் எடுத்துக்காட்டுகின்றனர். குறிப்பாக அநுராதபுர இராசதானியின் பிற்பட்ட காலப்பகுதியில் பல்லவர் கால தென்னிந்தியத் திராவிடக் கட்டடக்கலையின் செல்வாக்கினை இசுருமுனிய, நாலந்தா கெடிகே போன்றவற்றில் காணமுடியும். 10ஆம் நூற்றாண்டில் சோழரின் கீழ் இலங்கை கொண்டு வரப்பட்டதையடுத்து இந்து ஆலயங்கள் சோழர் கலைப்பாணியில் அமைக்கப் பட்டிருந்தன. இக்கால பௌத்த கட்டடங்களிலும் திராவிடக் கட்டடக்கலைப் பாணியின் அம்சங்கள் சிலவற்றை வரலாற்றாசிரியர்களும், கலை வரலாற் றாசிரியர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர். இப் பின்னணியில் நோக்கும்போது சோழரால் புனரமைப்பட்ட தமிழ் பௌத்தப்பள்ளியும் அவ் வாறான தன்மைகளைக் கொண்டிருந்ததில் வியப் பில்லை. விக்கிபீடியாவில் இந்துக்கள் இப் பள்ளியை நாதனார் கோயில் என அறிந்திருந்ததாக குறிப்பிடுகின்றமையும் நோக்கத்தக்கதாகும். எவ்வாறாயினும் இப்பௌத்தப் பள்ளிக்குரிய கட்ட டங்கள் பொலநறுவையிலுள்ள சிவதேவாலயத்தை ஒத்தவை என பேராசிரியர் இந்திரபாலா



குறிப்பிடுகின்றார். "சோழராட்சியின் போது தங்கள் பௌத்தப் பள்ளிகளைக் கூட திராவிடக் கட்டடப் பாணியிலேயே அமைத்து அக்கட்டடக் கலையை அவர்கள் இங்கு வளர்த்தனர் என்பதற்கு இராஜராஜப் பெரும்பள்ளி சான்று பகர்கின்றது" என அவர் குறிப்பிடுவதானது திராவிடக் கலையம் சங்கள் இலங்கையில் பௌத்த சமயத்தோடு இணைந்து வளர்ந்துள்ளதையும் சோழ ஆட்சியா ளரின் புதிய படைப்பாக்க முயற்சியையும், பௌத்தத்தின் மீது காட்டிய சகிப்புத் தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இங்கு காணப்பட்ட படிமாகரங்கள் சைவ வைணவக் கோயில்களில் காணப்படும் பரிவார தேவர் கோயில்களைப் போன்றவை எனக் கூறுவதும் கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

இலங்கையின் வரலாற்று மையங்களுள் திருகோணமலையில் அமைந்திருந்த தமிழ் பௌத்தப்பள்ளி இலங்கையில் தமிழ் பௌத்தத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டும் சான்றுகளைக் கொண்டிருக்கும் வகையில் சிறப்புக்குரிய ஒன்றாகும். கந்தரோடை தொட்டு இலங்கையில் குறிப்பிட்ட பகுதிகளில் பின்பற்றப்பட்ட தமிழ் பௌத்தம் பற்றி பாளி இலக்கியங்கள் வெளிப் படையான சான்றுகளைத் தராதநிலையில், இராஜ ராஜப் பெரும்பள்ளி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொல்லியல் மையம் என்ற வகையில் சிறப்புப் பெறுகின்றது. மேலும் சோழ ஆட்சியாளர் தமிழகத்தில் பௌத்தத்தை ஆதரித்துத் தானங்களை வழங்கியதைப் போலவே இலங்கையிலும் சமய சகிப்புத் தன்மையுடைவர்களாக விளங்கியதை இதன் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.